தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு. பெ. சாமிநாதன் சென்னை, நந்தனம், அரசு கலைக் கல்லூரியில் நேற்று (19.02.2026) தமிழ் வளர்ச்சித் துறை சார்பில் தமிழ்த் தாத்தா டாக்டர் உ. வே. சா. அவர்களின் 172 ஆவது பிறந்த நாளை முன்னிட்டு நடைபெற்ற 'தமிழ் இலக்கிய மறுமலர்ச்சி நாள்' நிறைவு விழாவில், சிறந்த நூல் பரிசு வழங்கும் திட்டத்தின் கீழ் 2024 ஆம் ஆண்டு தெரிவு செய்யப்பெற்ற நூலாசிரியர்கள் மற்றும் பதிப்பகத்தார்களுக்கு பரிசுத் தொகை மற்றும் பாராட்டுச் சான்றிதழ்களை வழங்கினார். இந்நிகழ்ச்சியில் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை செயலாளர் வே.ராஜாராமன், தமிழ் வளர்ச்சித் துறை இயக்குநர் முனைவர் ந.அருள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

தலைமை சி.சுரேஷ்! மு.வினோத் வரவேற்புரை! பெருங்களத்தூர் வடக்கு பகுதி

33வது வட்ட திமுக சார்பில் சாதனை விளக்க தெருமுனை கூட்டம் - நல உதவிகள்!

எஸ்.ஆர்.ராஜா எம்.எல்.ஏ, சிறப்புரை! மேயர் க. வசந்தகுமாரி - டி. காமராஜ் - எஸ். இந்திரன் பங்கேற்பு!

தாம்பரம், பிப்.20

தாம்பரம் மாநகரம் பெருங்களத்தூர் வடக்கு பகுதி 33வது வட்ட திமுக சார்பில் திராவிட மாடல அரசின் சாதனை விளக்க தெருமுனை கூட்டம் மற்றும் நலத்திட்டம் வழங்கும் விழா நாளை (21.02.2026), சனிக்கிழமை மாலை 5 மணிக்கு சித்தி விநாயகர் கோவில் தெரு, காமராஜ் நகர் 2வது குறுக்கு தெரு சந்திப்பில் மாமன்ற உறுப்பினர், மாநகர பிரதிநிதி சி.சுரேஷ் தலைமையில், வட்டச் செயலாளர் மு. வினோத் வரவேற்புரையில் நடைபெறுகிறது.

இதில் பி. தியாகராஜன், மா. கன்னியப்பன், டி.ரமேஷ் குமார், ராணி விஜயன், எஸ். சுரேஷ், எம்.ஸ்டாலின், ஜி. பார்த்திபன், சி. மேகநாதன், டி. கமலக்கண்ணசிவ, எம்.பி. பார்த்திபன், என்.மதன், ஜெ. நரேஷ் குமார், எம்.இ. ராஜேஷ், பி.ஹரிஷ், பி. பால முருகன், வி. ஏழுமலை, பி. தினேஷ்குமார், கே. பாலாஜி, ஆர். வினோத்குமார், ரா. ஸ்டாலின், பி. தினேஷ், ஆர். விஜய் (எ) பாலாஜி, ஜி. கார்த்திக் ரகுநாதன், ஆகியோர் முன்னிலை வருகின்றனர்.

இக்கூட்டத்தில் மாநகரச் செயலாளர் தாம்பரம் சட்ட மன்ற உறுப்பினர் எஸ்.ஆர். ராஜா கழக அரசின் சாதனைகளை விளக்கி சிறப்புரை யாற்றுகிறார்.

இதில் மேயர் க. வசந்தகுமாரி, பகுதிச் செயலாளர் டி. காமராஜ் எம்.சி., பகுதி செயலாளர் எஸ். இந்திரன் எம்.சி., கி வேல்மணி, எஸ்.ஜி.கருணாகரன், டி.ஆர்.கோபி லிங்கேஸ்வரி, பாபு ராணி ஆதிமூலம், பி. ஜோதி குமார், எல். பெரியநாயகம், ஆர். தாமோதரன், சசிகலா கார்த்தி, ஜா. ரவிக்குமார், இரா. விஜயகுமார், இ. மனோகரன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் பங்கேற்கின்றனர்.

இறுதியில் என்.விஜயன் நன்றி கூறுகிறார்.

நே.சிற்றரசு தலைமையில்

சென்னை மேற்கு மாவட்ட இலக்கிய அணி நிர்வாகிகள் கூட்டம்!

அமைப்பாளர் மு.சீனிவாசன் அறிக்கை!

சென்னை, பிப்.20-

சென்னை மேற்கு மாவட்ட தி.மு.க. இலக்கிய அணியின் ஆலோசனை கூட்டம் நே.சிற்றரசு தலைமையில் இன்று நடைபெறுகிறது.

இதுகுறித்து மாவட்ட அமைப்பாளர் மு.சீனிவாசன் அறிக்கை வருமாறு :

மாநில தி.மு.க. இலக்கிய அணியின் ஆலோசனை கூட்டம் கடந்த, (15.02.2026, ஞாயிற்றுக்கிழமை) அன்று, அண்ணா அறிவாலயத்தில், மாநில இலக்கிய அணியின் தலைவர். முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் அன்வர் ராஜா தலைமையிலும், மாநில இலக்கிய அணியின் செயலாளர் வி.பி.கலைராஜன் முன்னிலையிலும் நடைபெற்றது.

இக்கூட்டத்தில், எடுக்கப்பட்ட தீர்மானத்தின் படி, சென்னை மேற்கு மாவட்ட இலக்கிய அணியின் ஆலோசனை கூட்டம், இன்று (20.02.2026 - வெள்ளிக்கிழமை) மாலை 06.00 மணியளவில், நுங்கம் பாக்கம், காம்தார்நகர், முதல் தெருவில் உள்ள, சென்னை மேற்கு மாவட்ட கழக அலுவலகத்தில், சென்னை மேற்கு மாவட்ட கழக செயலாளர் நே.சிற்றரசு தலைமையிலும், சென்னை மேற்கு மாவட்ட இலக்கிய அணி அமைப்பாளர் மு.சீனிவாசன் முன்னிலையிலும், நடைபெற உள்ளதால்,

நமது சென்னை மேற்கு மாவட்ட இலக்கிய அணியின், மாவட்ட நிர்வாகிகள், புல்லட் பா.கனேசன், தி.டி. பாபு, அரும்.கோ.முரளி, கி. பரமசிவம், து.கந்தசாமி, தம்பிதுரை, பூ.சந்திரகேசவன், நா.அசோகன், இரா.சங்கர், மற்றும் பகுதி, நிர்வாகிகள், ஆயிரம் விளக்கு மேற்கு பகுதி, சேஷாத்திரி என்கிற பாலா, ஆயிரம் விளக்கு கிழக்கு பகுதி, சி.மூர்த்தி, சேப்பாக்கம் பகுதி வேதா. உதயசூரியன், திருவல்லிக்கேணி பகுதி, ஆர்.ரஞ்ஜித் குமார், அண்ணாநகர் தெற்கு எஸ்.பழனி, அண்ணாநகர் வடக்கு வி.வெங்கடேசன் மற்றும், சென்னை மேற்கு மாவட்டத்தை சார்ந்த அனைத்து பகுதி இலக்கிய அணியின் நிர்வாகிகள் அணைவரும், நிகழ்ச்சிக்கு தவறாமல் வந்து கலந்துக் கொள்ள வேண்டுமென, மாவட்ட அமைப்பாளர் மு. சீனிவாசன் கேட்டுக் கொள்கிறார்.

மக்கள் முதல்வரின் மனித நேய விழாவை முன்னிட்டு சென்னை கிழக்கு மாவட்ட தி.மு.க. துறைமுகம் கிழக்கு பகுதி 56வது வட்டத்தில் முதல்வர் பிறந்தநாளையொட்டி 56 வது வட்ட கழகச் செயலாளர் எம்.பரத்குமார் தலைமையில் அமைச்சர் பி.கே. சேகர் பாபு முன்னிலையில் தயாளுஅம்மாள் பயிற்சிப் பள்ளியில் அழகுக்கலை பயிற்சி பெற்ற மாணவர்களுக்கு அழகுக்கலை இருக்கை மற்றும் உபகரணங்களை அமைச்சர் திருமதி.கயல்விழி செல்வராஜ் திரைப்படக் கலைஞர் தம்பி இராமையா ஆகியோர் வழங்கினர். உடன் மேயர் பிரியா ராஜன் எஸ். இராஜசேகர் எஸ்.முரளி இரா.நரேந்திரன் எம்.விஜயகுமார் ப.ஸ்ரீராமுலு: ஜி.எம்.தேவன் NPM.சேக்அப்துல்லா ராஜெஷ்ஜெயின் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் பங்கேற்றனர்.

சென்னை மாவட்டத்திற்குட்பட்ட 16 சட்டமன்றத் தொகுதிகளில் மேற்கொள்ளப்பட வேண்டிய

தேர்தல் பணிகள் குறித்து தேர்தல் அலுவலர்களுக்கான பயிற்சி வகுப்பு!

சென்னை,பிப்.20-

இந்திய தேர்தல் ஆணையத்தின் உத்தரவின்படி, நடைபெறவுள்ள தமிழ்நாடு சட்டமன்ற பொதுத் தேர்தல் 2026னை முன்னிட்டு, சென்னை மாவட்டத்திற்குட்பட்ட 16 சட்டமன்றத் தொகுதிகளில் மேற்கொள்ளப்பட வேண்டிய பணிகள் தொடர்பாக மண்டல அலுவலர்கள் மற்றும் காவல் துறையினர் உள்ளிட்ட அலுவலர்களுக்கான பயிற்சி வகுப்பு கூடுதல் மாவட்ட தேர்தல் அலுவலர்/இணை ஆணையாளர் (கல்வி) திருமதி க. கற்பகம், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நேற்று (19.02.2026) ரிப்பன் கட்டட வளாகக் கூட்டரங்கில் நடைபெற்றது.

தமிழ்நாடு சட்டமன்ற பொதுத் தேர்தல் 2026 நடைபெறவுள்ளதை முன்னிட்டு, இப்பணிகளில் ஈடுபடவுள்ள மண்டல அலுவலர்கள், தேர்தல் நடத்தும் அலுவலர்கள், உதவி தேர்தல் நடத்தும் அலுவலர்கள், காவல்துறையினர், தேர்தல் பணி தொடர்புடைய இதரத் துறையினர் உள்ளிட்ட 1000 அலுவலர்களுக்கு காலை, மதியம் மற்றும் மாலை என மூன்று கட்டங்களாக பயிற்சி வகுப்பு நடத்தப்பட்டது.

இப்பயிற்சி வகுப்பில் வாக்குப்பதிவு இயந்திரங்களை வாக்குப்பதிவு மையத்திற்கு கொண்டு செல்லுதல், வாக்குப்பதிவு முடிந்த பின் வாக்கு எண்ணிக்கை மையத்திற்கு கொண்டு செல்லுதல், வாக்குப்பதிவின்போது வாக்குப்பதிவு இயந்திரங்கள் பழுது ஏற்படின் அதற்கு மாற்று இயந்திரங்களை வழங்குதல், இந்த பணிகளின் போது பூர்த்தி செய்ய வேண்டிய படிவங்கள், பாதுகாப்பு நடவடிக்கைகள் உள்ளிட்ட தொடர்புடைய தேர்தல் பணி குறித்த பயிற்சி வழங்கப்பட்டது.

மேலும், தேர்தல் நடத்தும் அலுவலர்கள் தங்கள் பகுதிக்குட்பட்ட வாக்குச்சாவடி மையங்களில் குடிநீர் வசதி, கழிவறை வசதி, மின் வசதி, மாற்றுத்திறனாளிகள் வாக்களிக்க ஏதுவாக சாய்வுதளம் உள்ளிட்ட அடிப்படை வசதிகள் உள்ளனவா என்பதை களஆய்வு மேற்கொண்டு, தகவல் தெரிவித்திட அறிவுறுத்தப்பட்டது.

சென்னை மாவட்டத்தில் உள்ள 16 சட்டமன்றத் தொகுதிகளில் உள்ள வாக்குப்பதிவு மையங்களில் வாக்குப்பதிவிற்காக செய்யப்பட வேண்டிய முன்னேற்பாட்டுப் பணிகள் குறித்தும், சட்டம் ஒழுங்கு தொடர்பாக மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் பதற்றமான மற்றும் மிகவும் பதற்றமான வாக்குச்சாவடி மையங்களில் மேற்கொள்ளப்பட உள்ள பாதுகாப்பு வசதிகள் குறித்தும் தொடர்புடைய அலுவலர்கள் களஆய்வு மேற்கொண்டு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டது.

இப்பயிற்சி வகுப்பில் மாவட்ட வருவாய் அலுவலர்கள்

திருமதி நா. பூஷ்ணா தேவி (தேர்தல்கள்), திரு. ஜி.சரவணமூர்த்தி (நிலம் (ம) உடைமை), 16 சட்டமன்றத் தொகுதி மண்டல அலுவலர்கள், தேர்தல் நடத்தும் அலுவலர்கள், உதவி தேர்தல் நடத்தும் அலுவலர்கள் உள்ளிட்ட தேர்தல் பணி தொடர்புடைய அலுவலர்கள் கலந்து கொண்டனர்.